ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, சென்னை மாநகராட்சி 166–வது வட்டம், நங்கநல்லூரில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன், ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, வட்டச் செயலாளர்கள் இ.உலகநாதன், ஜெ.நடராஜன், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் தினம் 2026 ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் சிறப்பாக நடத்துவது தொடர்பாக ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் வள்ளலார், அரசு கூடுதல் செயலாளர் சி.பாலசுப்பிரமணியம், மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மானம் ஏற்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. நாஞ்சில் சம்பத் சிறப்புரை! அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர் செப் 27;
திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு கூட்டம் இன்று 27092025 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் நசரத்பேட்டையில் நடைபெறுகிறது இதில் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமை வகிக்கிறார் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் வரவேற்புரையாற்றிகிறார்

இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, திராவிட இயக்கம் சிந்தனையாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்கள்

அதுசமயம் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, தொகுதி பார்வையாளர்கள் பிடிசி.செல்வராஜ் நிவேதா ஜெசிகா, மாவட்ட கழக நிர்வாகிகள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர், ஆவடி மேயர் உதயகுமார், மாநகர ஒன்றிய

நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் சண்.பிரகாஷ், டி.தேசிங்கு, ஜி.ஆர்.திருமலை, தி.வே.முனுசாமி, என்.இ.கே.மூர்த்தி, ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பேபிசேகர், பொன்.விஜயன், தி.வை.இரவி, ஆர்.ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், த.தங்கம் முரளி, டி.முரளி கிருஷ்ணன்

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சுரேஷ் குமார், டி.குமரேசன், என்.சண்முகம், சங்கீதா சீனிவாசன், ஒ.ஆர்.நாகூர்கனி, ஏ.ஜி.ரவி, ஏ.ஜெ.பவுல், பெ.வினோத், வி.தியாகராஜன், ஆர்.பிரவீன் குமார், ஆதிகேசவன், சௌந்தரராஜன், ஏ.விமல் ஆனந்த், எம்.மோகன், கு.தமிழ்செல்வி, த.குமரேசன், நிஜலிங்கம், க.ஷாஜகான், டி.ராஜேஷ் குமார், ஐ.ஜாக்கப், வி.பார்த்திபன், பசீர் அகமது, ஜி.துர்கா பிரசாத், மாவட்ட அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்

எனவே திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் நடைபெறும் கூட்டத்திற்கு பெருந்திரளாக கூட்டத்தை அழைத்து வந்து பங்கேற்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தமது அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.

உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் சிறப்புரை!

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, செப்.27-
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் கோடம்பாக்கம், புலியூர் மெயின் ரோடு, டிரஸ்ட்புரம் 6வது தெரு சந்திப்பில் இன்று (27.9.2025 - சனிக் கிழமை) மாலை 5.00 மணி அளவில் நடைபெறுகிறது.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எனது தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதிசெயலாளர் மா.பா.அன்புதுரை ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ. சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, ஐ.கென்னடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி., கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை கழக பேச்சாளர் - ஆயிரம்விளக்கு தொகுதி பார்வையாளர் சைதை சாதிக், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், நா.எழிலன், அண்ணாநகர் தொகுதி பார்வையாளர் வே.கௌதம், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி பார்வையாளர் சி.எச்.சேகர் ஆகியோர் உரையாற்றுகின்றனர். இந்நிகழ்வில் பகுதிக் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக்கழக செயலாளர்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்ட முடிவில் 112அ வட்டக் கழக செயலாளர் மு.மோகன், 112வது வட்ட கழக செயலாளர் வரதை த.பரி, 112வது வார்டு மாமன்ற உறுப்பினர் எலிசபெத் அகஸ்டின்பாபு நன்றியுரை ஆற்றுகின்றனர்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மயிலை த.வேலு.எம்.எல்.ஏ., நந்தனம் கி.மதி எம்.சி. பங்கேற்பு!

121 'அ' வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, செப். 27-
சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு.எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலையில் 121அ வட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் இன்று (27/9/2025) மாலை 6.30 மணியளவில் வட்ட கழக அலுவலகத்தில் அவை தலைவர் எஸ்.கணேசன் தலைமையில், மாவீரர் ஜெ அன்பழகன் பெயரில் மேம்பாலம் திறக்கவிருக்கும் கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பு மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் , மாவட்ட பிரதிநிதிகள் ,BLA2 & BDA மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச்செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை விடுத்துள்ளார்.

தியாகராயர் நகர் 131வது வட்டக் கழகத்தினருக்கு!

வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் வேண்டுகோள்!

சென்னை, செப். 27-
சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர்நகர் தொகுதியில், சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.165 கோடி மதிப்பில் தியாகராயர் நகர் உஸ்மான் சாலையில் முன்னாள் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர், திராவிட போராளி, தீரர். ஜெ.அன்பழகன், அவர்களது பெயரில் கட்டியுள்ள புதிய மேம்பாலத்தை நாளை (28.09.2025 -ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் திராவிட மாடல் அரசர், நல்லாட்சி நாயகர், கல்வி தந்தை கழகத்தலைவர் தளபதி.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை.த.வேலு எம்.எல்.ஏ., ஆலோசனையேற்று தியாகராயர்நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர்நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயர் நகர் கிழக்கு பகுதி அவைத்தலைவர் மு.மணிவண்ணன், தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஷ் வரன்.எம்.சி., 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன் எம்.சி. ஆகியோர்கள் வேண்டுகோளை ஏற்று நமது 131வது வட்ட கிளைக்கழத்தின் சார்பில் 1000 பேருக்கு மேல் கலந்துக்கொண்டு விழாவினை சிற்ப்பிக்கு அன்புடன் வேண்டுகிறேன்.

ஆகையால் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

தி.மு.க. மாணவர் அணி

திருப்பூர் மத்திய மாவட்டம் திருப்பூர் தெற்கு மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் தெ.விஜயசிம்மராஜா அவர்களுக்குப் பதிலாக திரு. **செ. திலகராஜ்,** பி.பி.எம்., (நெ.9/5, கொங்கு நகர் 3-வது வீதி, திருப்பூர் - 641 607) அவர்கள் திருப்பூர் தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளராகவும்;

திருப்பூர் தெற்கு மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ம.பிரேம்கவின், சி.சுரேசு, திருமதி இரா. செல்லாத்தாள் மற்றும் ச.மதன்குமார் ஆகியோருக்குப் பதிலாக

ஆ. பீர்முகமதுசேக், 35, பழனியம்மாள் நகர் முதல் வீதி, விஜயாபுரம், காங்கேயம் சாலை, திருப்பூர்.

க. சாம் கிஷோர், 59/44, ஏபிடி சாலை, கருவம்பாளையம், திருப்பூர்.

வெ.குணா, 22/17, வி.பி.சிந்தன் நகர், வலையங்காடு, சாமுண்டிபுரம், திருப்பூர்.

செல்வி அ. கலையரசி, 2/506, கேசி.எம். நாச்சம்மாள் காலனி, பெரியாண்டிபாளையம், திருப்பூர்.

ஆகியோர் திருப்பூர் தெற்கு மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-09-2025.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி. சுண்ணாம்புகுளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடியே 32 லட்சம் திட்ட மதிப்பில் வகுப்பறை கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா மற்றும் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் ரூபாய் 60 லட்சம் திட்ட மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட 3 வகுப்பறை கட்டிடத்தை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன். மு.பாஸ்கர், இரா அறிவழகன், மு.கேசவன், எம்.ஜெயசந்திரன் ஆர்.எஸ். காளத்தி, ஆர்.சிவகுமார், ப.அறிவழகன், ஏ.பழனி ஜி இளவரசன், சேகர் நரேந்திரன், ம.மெய்யழகன், எம்.ரவி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் உஷாரவி, சங்கர். ப.ஆனந்தராஜ். எம்.அமுல்ராஜ், அஜித் மனோஜ் தீபக், எஸ்.டி.ஒ.கவிதா, ஒப்பந்தகாரர் தீர்த்தலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வாகை ஏற்க மீண்டும் வா! தலைவா!

தயாளு அன்னையின் புதல்வா! முதல்வா!
தன்பால் உலகை ஈர்க்க வா!
ஜனநா யகத்தின் உயரிய மாண்பைச்
சரித்திர ஏட்டில் வார்க்க வா!
" தயை"யைக் "கொடை"யை விளைக்கும் உழவா!
சகோத ரக்கரம் கோர்க்க வா!
தஞ்சையின் வளவா! பொன்னியின் செல்வா!
தமிழரின் துயரம் தீர்க்க வா!

சாத்திரச் சழக்கில் உழன்று தவிக்கும்
சாதீய இழிவைப் போக்க வா!
"சமத்துவ புரமாய்" நாடு தழைக்கச்
சமூக நீதியைக் காக்க வா!
மூத்தவர் நம்திரு மூலர், வள்ளுவர்
மொழிகளைச் சட்டம் ஆக்க வா!
மூடத் தனத்தின் மனுதர் மத்தை
முகத்திரை கிழித்து நீக்க வா!

கருணை இலாதார் கொடிய செயலைக்
கனன்று நெருப்பாய் தீய்க்க வா!
காலத் தாயின் கடைவிழிப் பார்வை
கழகத் துக்கே வாய்க்க வா!
அருளே! அறமே! அறிவா யுதமே!
ஆதிக்க புரியைத் தாக்க வா!
அன்பு ததும்பும் அகத்தை முகத்தை
அத்தனைத் திசைகளும் நோக்க வா!

அன்னை நிலத்தை ஆளத் துடிக்கும்
"ஆரிய சூழ்ச்சிகள்" தோற்க வா!
" ஐயா அண்ணா கலைஞர் சுடரை"
அணையாது கையில் தூக்க வா!
முன்னடி வைக்கும் நின்னடி கண்டு
மொழிப்பகை நடுங்கி வேர்க்க வா!

கவிச்சுடர்
கவிதைப்பித்தன்

"முத்து வேல்கரு ணாநிதி ஸ்டாலின்"
முழுத்திறன் அனைவரும் பார்க்க வா!

விண்ணில் மோதி எதிரொலிக் கட்டும்!
வெற்றி முழக்கம் ஆர்க்க வா!
விழுதுக ளோடு வேர்களும் வாழ்த்த
வீரப் புன்னகை பூக்க வா!
வண்ணம் மின்னும் கண்ணியத் தலைவா!
வலிமை களத்தில் சேர்க்க வா!
மக்கள் கணக்கு! மகுடம் உனக்கு!
வாகை மீண்டும் ஏற்க வா!

அண்ணாநகர் 101 'அ' வட்டச் செயலாளர் சி.பி. திருமலை தலைமை!

மூத்த முன்னோடி சி. தேவராஜ் நினைவேந்தல் நிகழ்ச்சி!

சென்னை செப்.27
சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் வடக்கு பகுதியில் வசித்து வந்த ஒருங்கிணைந்த அண்ணாநகர் தொகுதியின் முன்னாள் பகுதி துணை செயலாளரும், வட்டச் செயலாளருமாக பணியாற்றியவருமான கழக மூத்த முன்னோடி திரு.சி தேவராஜன் (வயது 86) அவர்கள் கடந்த 13.9.2025 அன்று வயது மூப்பால் இயற்கை எய்தினார்.

அவரது உடலுக்கு அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே.மோகன், வடக்கு பகுதி செயலாளர் ச. பரமசிவம், தெற்கு பகுதி செயலாளர் ந. ராமலிங்கம் எம். சி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சோ.மா. ராமச்சந்திரன், கழக முன்னோடி கோ. நடராஜன்,மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக்மோகன், வட்ட செயலாளர்கள் ஆ. ஏகாம்பரம், கு. பாபு, க. கோவிந்தராஜ், பி. சந்திரசேகர், எம். ஜி.ரவிகுமார், பி.ஜெய்சங்கர், வி.எம்.சிவா, அருண் கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் மெட்டில்டா கோவிந்தராஜ், நா.அதியமான், வசந்தி பரமசிவம், ராணி ரவிச்சந்திரன், புஷ்பலதா ஜெய்சங்கர், அரசு வழக்கறிஞர் வி. நன்மாறன், மற்றும் கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர். மறைந்த தேவராஜன் அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி 28.9.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சென்னை30 பிரிவிரி சாலை, பாரதிபுரம் முகவரியில் அமைந்துள்ள மாங்காளியம்மன் கோயிலில் உள்ள மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் கழகத்தினர் கலந்து கொண்டு அன்னாருக்கு நினைவஞ்சலி செலுத்துகின்றனர். நினைவஞ்சல் நிகழ்ச்சி ஏற்பாடுகளை 101 அ வட்ட செயலாளர் சி.பி. திருமலை செய்துள்ளார்.

இராயபுரம் கிழக்கு பகுதி 49வது வட்ட திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு வட்டக் கழக பொறுப்பாளர் க.கலைசெல்வன் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் முன்னிலையில் ஐடீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. கழக கொடியேற்றி பேரறிஞர் அண்ணா படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் பி.டி.பாண்டி செல்வம், வ.பெ. சுரேஷ், வே. சிவகுமார், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், எல்.சீனிவாசன், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, அ.குமார், கே.ஆர்.கோபிநாத், ஜி.கோதண்டன், த.கு. பன்னீர்செல்வம், ப.சுதாகர், ஏ.கதிரவன், கே.பாஸ்கர், அ.வேணுகோபால், சி.லிங்கேசன், பொன் லட்சுமி, க.சேகரன். எல். கிருஷ்ண ஹரிஹரன், எம்.மோகன், பாபு, வி.கலைச்செல்வன், எஸ்.சங்கர், ஜீ.விநாயகமூர்த்தி, கே. பாலகிருஷ்ணன், எம்.தங்கராஜ், எஸ்.பாரதி, கே.அரசு, கு.பரத், ப.மோகனசுந்தரம், எம். கன்னியப்பன், வி. சின்னசாமி, எஸ்..முத்துக்குமார், ஜி.ரேவதி, கே.அம்பிகாபதி, ஆர்.என்.ராமமூர்த்தி, சி.ஏ.மகேஷ் குமார், ப.நிதீஷ் குமார், தினேஷ்குமார் மற்றும் இளைஞர் அணி தோழர்கள் கலந்து கொண்டனர்.